வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

CIDA

ඉදිකිරීම් කර්මාන්ත සංවර්ධන අධිකාරිය
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY

OTC
CONSTRUCTION EQUIPMENT
OPERATOR TRAINING COLLEGE

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## புத்தம் புதிய நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் விநியோகம்

## பெறுகை இல.: 1/4/7/00/139-2026

1. இத்திட்டத்திற்கான பொதுவான பெறுகை அறிவித்தல், 2026.10.13 ஆம் திகதிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) இலக்கம் 1/4/7/00/139-2026 இல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த விலைமனுக்களுக்கான அழைப்பு வெளியிடப்படுகிறது.
2. CIDA இற்காக புத்தம் புதிய நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது அனைத்து உருப்படிகளுக்கும் கூறுவிலையிட முடியும்.

| இல. | இயந்திரம்/ உபகரண வகை | ஒவ்வொன்றுக்கும் தேவையான விலைமனு பிணை அல்லது ரொக்கப்பண வைப்பு | விலைமனு பிணை செல்லுபடி | விலைமனு செல்லுபடி |
|---|---|---|---|---|
| 01 | Forklift Truck | 100,000.00 | 2027.02.22 | 2027.01.25 |
| 02 | Truck mounted Crane | 230,000.00 | | |

3. விநியோகக் காலம் அதிகபட்சம் 60 நாட்கள் என்பதோடு விநியோக இடம் இயக்குநர் பயிற்சிக் கல்லூரி (OTC) – கல்குலம.
4. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
5. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர் jnimanthi@gmail.com ஊடாக நிர்மாண உபகரண பயிற்சி நிலைய (CETRAC), பணிப்பாளர்/EMS, பொறியியலாளர் (செல்வி) ஜே.ஏ.என்.என்.கே. ஜயகொடி இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு 2026.10.13 ஆம் திகதி தொடக்கம் 2026.10.23 ஆம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.00 வரை சாதாரண வேலை நாட்களில் வழங்கல் பிரிவில் பெறுகை ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு (கொழும்பு 07, சவ்சிறிபாய விஜேராம மாவத்தை, 123) CIDA மாநாட்டு அறையில் 2026.10.21 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு இடம்பெறும்.
7. தகைமை தேவைகள் கீழ் தரப்பட்டுள்ளன.
   - இந்த பெறுகை ஆவணத்தின் கீழ் கோரப்பட்ட நிர்மாண இயந்திரங்களின் அதே தயாரிப்பு மற்றும் வடிவத்தின் அரச/ அரச சார்பு அல்லது தனியார் நிறுவனத்திற்கு நிர்மாண இயந்திரத்தின் வழங்கலில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் தொடர்ச்சியான அனுபவம்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளில், அதே தயாரிப்பு மற்றும் வகையைச் சேர்ந்த நிர்மாண இயந்திரங்களை அரச நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் நான்கு தடவைகள் விநியோகித்த அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் இலங்கையில் இதனையொத்த வர்த்தக நாமத்திற்கான விலைமனுவுக்கு உற்பத்தியாளரின் விபரங்கள் மற்றும் உற்பத்தியாளரின் அங்கிகாரத்தைப் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - குறைந்தது கடந்த 5 ஆண்டுகளுக்காக குறித்த உற்பத்தியின் உள்ளூர் முகவராக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும்.
   - உற்பத்தியாளர் இயந்திரங்களின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்காக அங்கீகரிக்கப்பட்ட ISO 9001:2008 தர உத்தரவாதச் சான்றிதழ்களை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதன் செல்லுபடியான பிரதியை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

   மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
8. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 8,000.00 செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான பெறுகை ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டண முறை CIDA இன் சரப்பிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2026.10.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள்/ முன்மொழிவுகள் 2026.10.26 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு கீழுள்ள முகவரியில் நேரடியாக/ மெய்நிகரில் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தனித்தனியான அசல் மற்றும் நகல் கடித உறைகளை முத்திரை பொறிக்கப்பட்ட வெளிப்புற ஒற்றைக் கடித உறையில் மூடி அதன் இடது பக்க மேல் மூலையில் ''CIDA இற்காக புத்தம் புதிய நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் விநியோகம்'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் அல்லது ரொக்கப்பண விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
11. மேலுள்ள உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட முகவரி/ முகவரிகளானது:

**வழங்கல் பிரிவு,**
**2ஆவது மாடி,**
**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை,**
**"சவ்சிறிபாய"**
**இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07**

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை,**
**'சவ்சிறிபாய',**
**இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.**
**2026.10.13**